**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 08ம் நாள் - திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் வைகாசி 25-ம் நாள்

**கு.ப.ம.எண் 434/2026**

சிவா, வயது 31/2026, த/பெ. ரமேஷ் ..... மனுதாரர்/ எதிரி

-எதிர்-

காவல் ஆய்வாளர், நாகப்பட்டினம் நகர காவல்நிலையம்,
குற்ற எண் 119/2026 ......எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (08.06.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்தரப்பு வழக்குரைஞர் திரு. பி. ஆர். நடேச ஜெயராமன் மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு அரசு வழக்குரைஞர் திரு. ஆர். செல்வராஜ் ஆகியோர் ஆஜராகி எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**// உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண் 119/2026ன் கீழ், தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டம் பிரிவுகள் 4(1)(aaa), r/w 4(1-A)ன் கீழான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ள மனுதாரர்/குற்றம் சாட்டப்பட்டவரால் பிணை கோரி பிரிவு 483 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் நிரபராதி என்றும், மனுதாரர் மீது பொய்யான வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 17.04.2026 அன்று கைது செய்யப்பட்டு 53 நாட்களாக நீதிமன்றக்காவலில் உள்ளார் என்றும், இது ஐந்தாவது பிணை மனு என்றும், எனவே மனுதாரருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி சுமார் 116 லிட்டர் விஷ சாராயத்தை வைத்திருந்துள்ளார் என்றும், எதிரி மீது சுமார் 16 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றும், இவர் மீது போக்கிரி சரித்திர பதிவேட்டு எண்.681/2018ன் படி கண்காணிகப்பட்டு வருகிறார் என்றும், எதிரியை பிணையில்விட்டால் தொடர்ந்து இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவார் என்றும், இவ்வழக்கு விசாரணையையும் பாதிக்கும் என்றும் வாதிட்டு, மனுதாரருக்கு ஜாமீன் வழங்க கடுமையாக ஆட்சேபனை தெரிவித்தார்.

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் மீது தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டம் பிரிவுகள் 4(1)(aaa), r/w 4(1-A)ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் எவ்வித அரசு அனுமதியோ அல்லது அரசு உரிமமோ இல்லாமல் 116 லிட்டர் விஷ நெடியுடன் கூடிய சாராயத்தை வைத்திருந்த குற்றச்செயல் வாயிலாக 17.04.2026 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். எதிரி மீது சுமார் 16 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. மனுதாரர் சிறையில் இருந்த

நாட்களை கருத்திற்கொண்டு இந்த நீதிமன்றம் மனுதாரருக்கு நிபந்தனைகளுடன் ஜாமீன் வழங்கி உத்தரவிடுகிறது.

முடிவில், இம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரரரை ஜாமீனில் விடுவிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் மனுதாரர் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மதிப்பிலான பிணையப் பத்திரத்தையும், அதே தொகைக்கு இரு தனிப் பிணையாளர் (surety) பிணையத்தையும், **நீதித்துறை நடுவர் எண்.1, நாகப்பட்டினம்** அவர்களின் திருப்திக்குட்பட்டு தாக்கல் செய்ய வேண்டும். பிணைதாரர் (Surety) தனது நிழற்படத்தையும், இடது கை பெருவிரல் ரேகையையும் பிணைப் பத்திரத்தில் பதிக்க வேண்டும். மேலும், பிணைதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அவருடைய ஆதார் அட்டை அல்லது வங்கி சேமிப்புப் புத்தகத்தின் நகலை நீதிபதி பெற்றுக்கொள்ளலாம்.

1. மனுதாரர் சிறையிலிருந்து விடுதலையான தேதியிலிருந்து அடுத்த 30 நாட்களுக்கு தினமும் இரண்டு வேளைகள் காலை 10.00 மணிக்கும், மாலை 5.00 மணிக்கும் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திடவேண்டும்.

2. விசாரணை நீதிமன்றத்தில் அல்லது காவல்துறை முன், அவர்கள் அழைக்கும் போதெல்லாம் நேரில் ஆஜராக வேண்டும்.

3. வழக்கில் தொடர்புடைய சாட்சியங்களை கலைக்கவோ, மிரட்டவோ, அல்லது சாட்சிகளைப் பாதிக்கக்கூடிய எவ்வித செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

4. மனுதாரர் விசாரணை அல்லது வழக்கின் விசாரணையின் போது தலைமறைவாகக் கூடாது.

5. ஜாமீனில் இருக்கும் காலத்தில் வேறு எந்த குற்றச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

இன்று (08.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/- ஜி.எம். வசந்தி,
மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்

1. நீதித்துறைநடுவர் எண் 1, நாகப்பட்டினம்
2. காவல் ஆய்வாளர், நாகப்பட்டினம் நகர காவல்நிலையம்
3. திரு. பி. ஆர். நடேச ஜெயராமன், வழக்கறிஞர், நாகப்பட்டினம்